விஞ்ஞான பாடப் புத்தகங்கள்.

*515 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ் நாட்டுப் பாடப் புத்தகக் கழகத்தினால் வெளியிடப் பட்ட விஞ்ஞானப் புத்தகங்கள் எந்தவிதப் பயனின்றி வீணாகக் கிடக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

மூர் அங்காடி இடமாற்றம்.

*516 வினா—திரு. து. புருஷோத்தமன் திரு. என். கிட்டப்பா:— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர் அங்காடி இருக்குமிடத்தை இரயில் வேக்குக் கொடுத்துவிட அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மூர் அங்காடி எந்த இடத்திற்கு மாற்றப் படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு சென்னை மூர் அங்காடியை அடுத்துள்ள சில நிலங் களையும், அதைத் தவிர மூர் அங்காடி தற்போது இருக்கும் இடமும் தேவைப்படுகிறதென்று தென் பிராந்திய இரயில்வே நிர்வாகம் கேட்டிருக்கிறது. இப்பொருள் அரசின் பரிசீலனை யிலிருந்து வருகிறது.

(ஆ) இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை மாநகரிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மூர் அங்காடி இருந்துகொண்டிருக்கிறது. அந்த மூர் அங்காடி இருக்கும் இடத்தை இரயில்வே துறை கேட்பதை இந்த அரசு மறுத்து மூர் அங்காடி அந்த இடத்திலேயே இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?